# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2022

FWC

| புவியியல் Geography | Three Hours / Gr -12 (2022) | 22 | T | I,II |
|---|---|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**
- இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 20 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III, பகுதி IV, பகுதி V ஆகிய பகுதிகளில் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

1. புவியியலின் இடம்சார், காலம்சார் தோற்றப்பாடுகளை முன்வைப்பதற்குப் பயன்படுவது
   (1) படம் (2) கருப்பொருள் (3) இடவிளக்கம்
   (4) சமவுயரக்கோடு (5) சமஆழக்கோடு (…….)

2. இடவிளக்கப்படங்களின் விசேடபண்பாகக் கருதப்படுவது
   (1) அது முப்பரிமாண அடிப்படையில் வரையப்படுவதாகும்.
   (2) தெரிவு செய்யப்பட்ட குறித்தவொரு விடயம் சார்ந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுவது
   (3) புவிமீது காணப்படும் பௌதிக, பண்பாட்டு அம்சங்களுக்கிடையிலான இடைத்தொடர்பினை விளக்குவது
   (4) வெவ்வேறு காலங்களில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்டுவதாகும்.
   (5) ஒரு பிரதேசத்தின் ஒரு கருப்பொருள் மீது கவனம் செலுத்துவது (…….)

3. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஓர் அம்சத்துடன் சரியான பொருத்தத்தைக் கொண்ட நிறம் மற்றும் குறியீட்டினைக் காட்டும் விடையைத் தெரிக.
   (1) பாதுகாக்கப்பட்டவனம் - பச்சை நிறப்புள்ளி
   (2) நடைபாதை – கறுப்புநிறத்திலான முறிகோடு
   (3) நீர்ப்பாசனக் கால்வாய் - கபிலநிற முறிகோடு
   (4) அதிவேக நெடுஞ்சாலை – சிவப்பு நிற நேர்கோடு
   (5) நகரசபை எல்லை – நீலநிற முறிகோடு (…….)

4. புவியியல் தகவல் முறைமையில் (GIS) வெளியீட்டு மூலகங்களை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
   (1) காந்த இறுவட்டு, வருடிகள்
   (2) விசைப்பலகை, எண்ணிலக்கமாக்கும் கருவி
   (3) திரை, விசைப்பலகை
   (4) வருடிகள், திரை
   (5) திரை, அச்சுஉபகரணம் (…….)

5. தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் (RS) விண்வெளி மேடைகளாகப் பயன்படுபவை
(1) வான்வெளிவிமானம், சிறியரக விமானம்
(2) செய்மதிகள், விண்வெளி ஓடங்கள்
(3) கோபுரம், ஏவுகணைகள்
(4) வான்வெளி விமானம், ஹெலிகொப்டர்
(5) ஹெலிகொப்டர், ஏவுகணைகள் (…….)

6. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) இன் பிரதான கட்டுப்பாட்டு நிலையம் (Master Control Station) அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்காவின் மாநிலம்
(1) அரிசோனா (2) ஹவாய் (3) கலிபோர்ணியா
(4) கொலராடோ (5) புளோரிடா (…….)

7. புவியோட்டின் இருபடைகளான சீயல், சீமாப் படைகளில் காணப்படும் கனியங்கள்
(1) சிலிக்கா, அலுமினியம், மக்னீசியம்
(2) பொஸ்பரஸ், இரும்பு, மக்னீசியம்
(3) செம்பு, அலுமினியம், மக்னீசியம்
(4) பொஸ்பரஸ், செம்பு, அலுமினியம் (…….)

8. மண்ணின் படையமைப்பில் கழுவிச் செல்லும் வலயம் என அழைக்கப்படும் படை எது?
(1) B (2) D (3) C (4) R (5) A (…….)

9. சானோகைற் பாறை வகையினால் உருவாகியுள்ள இலங்கையின் மலைத்தொடர்
(1) பீதுறுதால கால மலைத்தொடர்
(2) நமுனகுல மலைத்தொடர்
(3) ஹப்புத்தளை மலைத்தொடர்
(4) சிவனொளி பாத மலைத்தொடர்
(5) கிரிகாலபொத்த மலைத்தொடர் (…….)

10. கண்ட, சமுத்திர தகட்டு ஒருங்கலின் போது மேலமைந்த கண்டத்தகட்டில் உருவாவது
(1) சுனாமி (2) கீழிறங்கல் வலயம் (3) மடிப்பு மலைகள்
(4) எரிமலைகள் (5) தீவுகள் (…….)

11. பின்வரும் தகடுகளின் ஒருங்கலில் இரண்டு கண்டத்தகடுகள் ஒருங்குவதற்கு உதாரணமாகக் கூறக்கூடியது
(1) நாஷ்கா – தென்னமரிக்கத்தகட்டு ஒருங்கல்
(2) பசுபிக் - பிலிப்பைன்ஸ் தகட்டு ஒருங்கல்
(3) யுரேசியன் - இந்தோ அவுஸ்ரேலியன் தகட்டு ஒருங்கல்
(4) வட அமெரிக்கா – நாஷ்காத்தகட்டு ஒருங்கல்
(5) கருபியன் - தென்னமரிக்கத்தகட்டு ஒருங்கல் (…….)

12. வெப்பக் காலநிலைப் பிரதேசங்களில் பிரதான புறவிசைக் கருவி
(1) ஓடும் நீர் (2) மலைப் பனிக்கட்டி (3) கண்டப்பனிக்கட்டி
(4) தரைக்கீழ்நீர் (5) காற்று (…….)

13. குவடு, ஊதுதுளை, அலைவெட்டியமேடை ஆகிய நிலவுருவங்களை உருவாக்குகின்ற புறவிசைக் கருவி

(1) தரைக்கீழ் நீர் (2) பனிக்கட்டியாறு (3) காற்று

(4) கடலலை (5) ஓடும் நீர் (…….)

14. கி.பி 2011 ஆம் ஆண்டின் இறுதி அரைப் பகுதியில் உலகக் குடித்தொகையில் ஏற்பட்ட மாற்றம் யாது?

(1) உலகக் குடித்தொகை 7 மில்லியனாக வளர்ச்சி அடைந்தது

(2) உலகக்குடித்தொகை 7 பில்லியனாக வளர்ச்சியடைந்தது

(3) உலகக் குடித்தொகை மறை பெறுமதியை எட்டியது

(4) வளர்ச்சி அடைந்த நாடுகளில் பிறப்பு வீதம் மிக உயர்வாக காணப்பட்டது.

(5) வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் சமூக பொருளாதார வளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. (…….)

15. விரிவடையும் கட்டத்தில் காணப்படும் சனத்தொகைக் கூம்பின் பண்பு

(1) பிறப்பு, இறப்பு வீதம் அதிகம்

(2) பிறப்பு வீதம் உயர்வு, இறப்பு வீதம் குறைவு

(3) பிறப்பு, இறப்பு வீதம் குறைவு

(4) பிறப்பு வீதம் குறைவு, இறப்புவீதம் அதிகம்

(5) பிறப்பு வீதம், இறப்புவீதம் குறைவு ஆயுள் எதிர்பார்ப்பு அதிகம். (…….)

16. ஆரம்பப் பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கிய விடை

(1) கைத்தொழில், விவசாயம், சேவை

(2) மீன்பிடி, கைத்தொழில், விவசாயம்

(3) கால்நடை வளர்ப்பு, சேவை, மீன்பிடி

(4) விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு

(5) வேட்டையாடுதல், சேவை, மீன்பிடி (…….)

17. இலங்கையில் நகரசெயற்பாடுகளை மேற்கொள்கின்ற சேவைநிலையமாகக் கருதப்படும் நகரம்

(1) நிட்டம்புவ (2) அத்துருகிரிய (3) பிலியந்தல

(4) கடுவெல (5) மாலபே (…….)

18. ஆபிரிக்காவில் குறைவான நகராக்க மட்டத்தினைக் கொண்ட இரண்டு நாடுகள்

(1) ரியுனியன், கேபோன் (2) எதியோப்பியா, எரித்திரியா (3) புரூண்டி, மலாவி

(4) அங்கோலா, நைகர் (5) சோமலியா, உகண்டா (…….)

19. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நாடு எது?

(1) மெச்சிக்கோ (2) இந்தியா (3) சீனா

(4) பிலிப்பைன்ஸ் (5) இந்தோனேசியா (…….)

20. அதிக விளைச்சல் தருகின்ற நெல், கோதுமை இனங்கள்

(1) நெறிக்கா, நொறின் 10 (2) $IR_1 36$, $TN_1$ (3)IR8, $H_4$

(4) 13G407, H8 (5) BG11, மொட்டைக்கறுப்பன் (…….)

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்
- இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி *20* மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு
- படத்தின் மேல் விடைகள் எழுதக் கூடாது
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 1:50,000 என்னும் அளவுத்திட்டத்திலமைந்த பிபிலை இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக் கோட்டு இடைவெளி *100* அடிகளாகும் அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   (i) A, B ஆகிய நாற்பக்கலில் காணப்படும் இரண்டு நிலவுருவங்களைப்பெயரிடுக. *(01 புள்ளி)*

   (ii) C, D ஆகிய நாற்பக்கலில் காணப்படும் இரண்டு குடியிருப்பு வகைகளையும் பெயரிடுக. (01 புள்ளி)

   (iii) E – H வரையான எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள இடங்களில் காணப்படும் நிலப்பயன்பாட்டு அம்சங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (iv) படப்பிரதேசத்தின் வீதி வலையமைப்பில் காணக்கூடிய பிரதான அம்சங்களைச் சுருக்கமாக ஆராய்க. *(04 புள்ளிகள்)*

   (v) படப்பகுதியின் தென்மேற்குப் பகுதியில் காணப்படும் குடியிருப்புக்களின் பரம்பலைக் கட்டுப்படுத்தியிருக்கின்ற பௌதிகக் காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (vi) படப்பகுதியின் பொருளாதார நடவடிக்கைகளைச் சுருக்கமாக ஆராய்க. *(06 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

   (i) அல்ப்ஸ் மலைத்தொடர்

   (ii) ஜாங்கிசிங்கியாங் நதி

   (iii) மத்தியதரைக்கடல்

   (iv) ஐஸ்லாந்து

   (v) குறையில் நீரோட்டம்

   (vi) மத்திய கோடு

   (vii) வெல்ட் புல்வெளி

   (viii) கட்சன்குடா

   (ix) ஒபெக் அமைக்கில் அங்கம் வகிக்கின்ற தென் அமெரிக்கா நாடு

   (x) பிரித்தானியாவின் தலைநகரம் *(10 புள்ளிகள்)*

## பகுதி - III பௌதிகப் புவியியல்

3. (i) கெப்பன் காலநிலை பாகுபாட்டினை முன்வைப்பதற்குப் பயன்படுத்திய இரண்டு நியதிகளும் எவை? *(01 புள்ளி)*

(ii) கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின் நான்கு பிரதான காலநிலை வகைகளை அவற்றின் குறியீடுகளுடன் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) மேலே பெயரிடப்பட்ட ஒரு காலநிலை வகையினை
1. பரம்பல்
2. பண்புகள் என்ற தலைப்புகளின் கீழ் விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் தாழ்நில ஈரவலய காலநிலை வலயத்தின் பண்புகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

4. (i) அகவிசை, புறவிசை என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) அமுக்க விசைத் தொழிற்பாடு காரணமாக உருவாகின்ற இரண்டு நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விபரிக்குக. *(03 புள்ளிகள்)*

(iii) பாலைவனப் பிரதேசத்தின் பண்புகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(iv) பாலை வனப்பிரதேசங்களில் நீரினால் உருவாக்கப்படுகின்ற இரண்டு நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(03 புள்ளிகள்)*

## பகுதி - IV மானிடப்புவியியல்

5. (i) பின்வரும் பதங்களை விளக்குக.
a. பருமட்டான இறப்புவீதம்
b. சனத்தொகைக்கட்டமைப்பு *(02 புள்ளிகள்)*

(ii) சர்வதேச இடப்பெயர்வு என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(iii) சர்வதேச இடப்பெயர்வினை ஏற்படுத்துகின்ற நான்கு காரணிகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iv) சர்வதேச இடப்பெயர்வினால் குடியேறும் நாடுகளில் ஏற்படும் விளைவுகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

6. (i) பசுமைப்புரட்சியின் விளைவாக அறிமுகப்படுத்தப்பட்ட விதையினங்களின் இயல்புகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) பசுமைப் புரட்சியினால் சூழலுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் நான்கு குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் நுகர்வு விவசாயத்தின் பண்புகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் விவசாயத்துறை எதிர்நோக்கும் இரண்டு சவால்களை விளக்குக. *(04 புள்ளிகள்)*

## பகுதி - V செய்முறைப் புவியியல்

7. (i) புவியியல் தகவல் முறைமை (GIS) என்றால் என்ன? *(02 புள்ளிகள்)*

   (ii) புவியியல் தகவல் முறையின் பிரதான கூறுகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

   (iii) புவியியல் தகவல் முறைமையின் உள்ளீட்டு மூலங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

   (iv) புவியியல் தகவல் முறைமையின் இரண்டு பயன்பாடுகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

8. (i) படம் என்றால் என்ன? *(02 புள்ளிகள்)*

   (ii) கருப்பொருள் படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

   (iii) கருப்பொருள் படங்கள் தயாரிக்கப்படுகின்ற இரண்டு நுட்பமுறைகளைத் தருக? *(02 புள்ளிகள்)*

   (iv) கருப்பொருள் படங்களின் நான்கு பயன்பாடுகளைத் தருக. *(04 புள்ளிகள்)*

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021**


**தரம் 12 (2022) புவியியல்**



**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**தவணைப் பரீட்சை - 2021**

**புவியியல்**




SCALE 1 : 50 000